**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.C.C.No. 73/2025**

**Deposition of Witness for Petitioner PW6(LW4)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **ரோசன் ராஜ்** |
| **Father's Name** | : | **அந்தோணி சாமி** |
| **Village** | : | **கட்டபெட்டு** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **கூலி வேலை** |
| **Age** | : | **47** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**26.02.2026** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர் இல்லை. இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 15.02 P.M (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கட்டபெட்டுவில் கார்ஸ்வுட்டில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 13.04.2025 ம் தேதியன்று, காலை எனது கடைக்கு அருகில் இருசக்கர வாகனத்தில் ஒரு விபத்து ஏற்பட்டு, கூட்டமாக இருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது விபத்தில் அடிப்பட்டவரை ஆம்புலன்ஸ்சில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். யாருக்கு அடிப்பட்டது, என்ன காயமானது

என்று எனக்கு தெரியவில்லை. விபத்து சம்பந்தமாக மறுநாள் 14 ம் தேதி மாலை 04.00 மணிக்கு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து, படம் வரைந்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை போலிசார் படம் வரையும்போது, சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். **அந்த 1வது கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் எனது மனைவி சர்மிளாவும் கையொப்பம் செய்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. விபத்தில் யாருக்கு, என்ன ஆனது என்பதும் எப்படி நடந்தது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கூட்டமாகவும் சத்தமாகவும் நான் சென்றேன் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் சம்பவத்தின்போது கடையில்தான் இருந்தோம் என்றால் சரிதான், போலிஸ் வந்து கையெழுத்து வாங்கிய பேப்பரில் உள்ள முழுவிபரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் .

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 26.02.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**